





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2026) தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 6.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 32 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 55.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 7,127 பயனாளிகளுக்கு 44.05 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார், ஈ.ராஜா, மரு.தி.சதன்திருமலைக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், நகராட்சி உறுப்பினர் வே.ஜெயபாலன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருமாறன் – ஆர்.வி.பாபு தலைமையில்

# ஜார்ஜ் டவுன் - உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்!



*சென்னை, மார்ச்.7*

ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வழக்கறிஞர்கள் மற்றும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் வழக்கறிஞர் திருமாறன் மற்றும் ஆர்.வி.பாபு ஆகியோர் தலைமையில் நேற்று (6-3-2026) வழக்கறிஞரும் முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பி.எச். மனோஜ் பாண்டியன் வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் - சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அ.தி.மு.க.விலிருந்து பிரிந்து தாய் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அ.தி.மு.க.வில் பல்வேறு பொறுப்பில் இருந்த வழக்கறிஞர்கள் தாய் கழகமான தி.மு.க.வில் இணைத்துக் கொண்டவர்கள் விவரம்.

பி.விஜயகுமார், டி.நந்தகுமார், ஏ.டி.நாகேந்திரன், ஏ.சத்யா, சி.ராகவன், ஜி.ராமர், பி.நிதிஷ்குமார் ரெட்டி, பி.ராஜா, எம்.வேணுகோபால், டி.ஹேமராஜ், பி.சிவபாலன், ஆர்.பிரதாப் ராஜ், எம்.பாலச்சந்தர், கே.ஹேமநாதன், டி.பால்ராஜ், பிரதாப் சந்தர், வெங்கடேசன், கருணாநிதி, பூங்கொடி, ஜெயக்குமார், சி.குமாரவேலு, எம்.சுரேஷ், எம்.ராஜேஷ்குமார், க.ஸ்ரீனிவாசன், பி.முபாரக் ஷரீஃப், ஐ.கார்த்திகேயன், எம்.கோடீஸ்வரன், பி.வினோத்குமார், ஆர்.யுவராஜ், எஸ்.சிலம்பரசன், பி.ஆர்.ராஜ்குமார், இ.சதீஷ், ஏ.கே.ராஜேஷ், ஏ.சந்தியா, எம்.மோனிஷா, எஸ்.அகிலன்,

பி.பிரபாகரன், டி.பிரேம், எஸ். மதிவாணன், எம்.வேல்முருகன், எஸ்.பிரேம் குமார், எம்.சிலம்பரசன், பி.அன்பரசன், எஸ்.பி.சிவசங்கர், எச்.சுப்ர மணியன், ஜே.சுந்தர், எம்.சுப்பிரமணி, எஸ்.பாலாஜி, வி.நடராஜன், பி.எம்.ஸ்ரீனிவாசன் ஆர்.சேகுவேரா, கே.ராகவேந்திரன், பி.அஸ்வின் குமார், பி.மகேந்திரா, சி.ராஜேஷ் குமார், கே.மதன் குமார், எஸ்.ரூபேஷ் குமார், சிரஞ்சீவி குரம், யூ.பிரதாப் குமார், எம்.நித்யபாரதி, கே.அபிஷேக், டி.லாரன்ஸ், பி.ஒய்.நாகராஜன், எஸ்.கமலேஷ், முத்துக்குமரன், ஏ.சுரேஷ், பி.யுவராஜ், எல்.பாலசுப்பிரமணியன், தமிழரசன் ஆகிய வழக்கறிஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் தலைமையில் ‘திராவிட மாடல்’ 2.0 ஆட்சி அமைந்திட

# களத்திலும் சமூக வலைதளத்திலும் அயராது பணியாற்றுவோம்!

## கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் காணொலிக் கூட்டத்தில் அணிச் செயலாளர் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரை!

*சென்னை, மார்ச் 7-*

திராவிட மாடல் 2.0 ஆட்சி நம் கழகத் தலைவர் திராவிட நாயகன் அவர்கள் தலைமையில் அமைவதை உறுதி செய்திட மார்ச் 9ஆம் தேதி, கழக வரலாற்றில் திருப்பு முனை வெற்றிகள் பல தந்த மலைக் கோட்டை மாநகரமாம் திருச்சியில் நடைபெறும் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ தேர்தல் சிறப்பு நிர்வாகிகள் மாநாட்டில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒரு இலட்சம் நிர்வாகி களும் தவறாமல் பங்கேற்று, களத்திலும் தளத்திலும் நம் பணியை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும் என மார்ச் 3 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை ஏற்ற அணிச் செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனைகள் வழங்கினார்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரையில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் செயல்பாடுகள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இணைச் செயலாளர் டாக்டர் சி.மகேந்திரன், அணியின் ஆலோசகர்கள், மாநில துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப் பாளர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### திருச்சியில் நடைபெறும் மாநாட்டில்

# திருவொற்றியூர் கிழக்கு பகுதியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## பகுதிக் கழகக் கூட்டத்தில் முடிவு! தி.மு.தனியரசு ஆலோசனை!

*சென்னை, மார்ச்.7-*

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் நேற்று (6.3.2026 -வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், சாந்தி, பக்தன் எம்.வி.குமார், ஆர்.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், பி.எஸ்.சைலஸ், ஆர்.ரஜினி பாபு, ஒய்.ரஜினி, நந்தி கே.கார்த்திகேயன், அ.அப்துல் சலிம், ம.எத்திராஜ், எம்.கோயலவள்ளி, மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

9.3.2026 திருச்சியில் நடைபெறும் மாநாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் கலந்து 50 பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய தி.மு.க, சென்னை வடகிழக்கு மாவட்டம்

